செ.வெ.எண்: 429/2019 நாள்: 09.09.2019

## மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் 507 மனுக்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பெற்றுக்கொண்டார்...

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் இன்று (9.9.2019) பொதுமக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.க.சு.கந்தசாமி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் பொது மக்களிடமிருந்தும், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலக வளாகத்தில் மாற்றுத்திறனாளிகளிடமிருந்தும் பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சியர் அவர்கள் நேரில் பெற்றுக் கொண்டார்.

மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் கல்வி உதவித்தொகை, வங்கிக்கடனுதவி, திருமண உதவித்தொகை, முதியோர் உதவித்தொகை, வீட்டுமனைப்பட்டா, சாதிச்சான்று, வேலைவாய்ப்பு, விதவை உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை மற்றும் உபகரணங்கள் உட்பட பல்வேறு கோரிக்கைகள் வலியுறுத்தி 507 மனுக்கள் பெறப்பட்டது. பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கை மனுக்களை சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் மாவட்ட ஆட்சியர் அவர்கள் வழங்கி, உடனடி நடவடிக்கை மேற்கொள்ள உத்திரவிட்டார். மேலும், நிலுவையிலுள்ள மனுக்களின் தொடர் நடவடிக்கைகள் குறித்தும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் மாவட்ட ஆட்சியர் அவர்கள் விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.

மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் செங்கம் வட்டம் வாய்விடாந்தாங்கல் கிராமத்ததை சேர்ந்த திருமதி.கஸ்தூரி என்பவருக்கு கணவர் இறந்து விட்டதற்காக இறப்பு நிவாரணம் ரூ.20,000 மற்றும் ஈடச்சடங்கு உதவித்தொகை ரூ.2,500 ஆக மொத்தம் ரூ.22,500-மும், கலசபாக்கம் வட்டம் கீழ்பாலூர் கிராமத்தை சேர்ந்த திருமதி.அம்மு என்பவருக்கு ஆதரவற்ற விதவை உதவிதொகை மாதம் ரூ.1,000 பெறுவதற்கான ஆணையினையையும், கீழ்பென்னாத்தூர் வட்டம் ஆனானந்தல் கிராமத்தை சேர்ந்த திருமதி.சுந்தராம்பாள் என்பவருக்கு ஆதரவற்ற விதவை உதவிதொகை மாதம் ரூ.1,000 பெறுவதற்கான ஆணையினையையும், தண்டராம்பட்டு வட்டம் ராதாபுரம் கிராமத்தை சேர்ந்த திரு.சிவா என்பவருக்கு தன்னுடைய மனைவி திருமதி.ஜாக்குலின் என்பவர் தீ விபத்தில் இறந்தமைக்காக ரூ.50,000-மும், செங்கம் வட்டம் அந்தனூர் கிராமத்தை சேர்ந்த திரு.கோபி என்பவருக்கு அவருடைய மகன் நீரில் மூழ்கி இறந்து விட்டமைக்காக ரூ.1,00,000-மும், செங்கம் வட்டம் அல்லியந்தல் கிராமத்தை சேர்ந்த திருமதி.பிலோமினா என்பவருக்கு தன்னுடைய கணவர் ஜெயராஜ் மின்சாரம் தாக்கி இறந்து விட்டமைக்காக ரூ.1,00,000-மும், செங்கம் வட்டம் அல்லியந்தல் கிராமத்தை சேர்ந்த திருமதி.அன்னபூரணி என்பவருக்கு தன்னுடைய கணவர் அன்பரசு மின்சாரம் தாக்கி இறந்து விட்டமைக்காக ரூ.1,00,000-மும்,சேத்பட்டு வட்டம் மோதனப்பாளையம் கிராமத்தை சேர்ந்த திருமதி.சங்கீதா என்பவருக்கு மகள் சுபாஷினி நீரில் மூழ்கி இறந்துவிட்டமைக்காக ரூ.1,00,000-மும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார். மற்றும் கல்வி உதவித்தொகையாக சேத்பட்டு வட்டம் தேவிகாபுரம் கிராமத்தை சேர்ந்த செல்வி.திவ்யா த/பெ பொன்னுசாமி என்பவருக்கு பொறியியல் பி.இ. பட்டப்படிப்பு படிக்க ரூ.50,000 மும், திருவண்ணாமலை வட்டம் தலையாம்பள்ளம் கிராமத்தை சேர்ந்த செல்வன்.அரிகரன் த/பெ.பாபு என்பவருக்கு தொழில் நுட்ப கல்வி பி.டெக் பட்டப்படிப்பு கல்வி உதவித்தொகை ரூ.50,000-மும்

மாற்றுத்திறனாளிகள் அலுவலகத்தின் மூலமாக மாற்றுத்திறனாளிகள் நல வாரியத்தின் கீழ் செயல்படும் சமூக பாதுகாப்பு திட்டங்களுக்கான உதவித்தொகை திட்டத்தின் கீழ் ஈமச்சடங்கு.்.இயற்கை மரணத்திற்காக ஒரு பயனாளிக்கு ரூ.17,000 மும், ஒரு பயனாளிக்கு கல்வி உதவித்தொகை ரூ.1,000-மும், 6 மாற்றுத்தறனாளி நபர்களுக்கு காதுக்கு பின்னால் அணியும் காதொலி கருவிக்காக ரூ.14,040 ஆக மொத்தம் 8 நபர்களுக்கு ரூ.32,040 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.சு.கந்தசாமி,இ.ஆ.ப., அவர்களால் வழங்கப்பட்டது.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பொ.ரத்தினசாமி தனித்துணை ஆட்சியர் சமூக பாதுகாப்பு திட்டம் திரு.வில்சன் ராஜசேகர், திட்ட இயக்குநர் மகளிர் திட்டம் திருமதி.பெ.சந்திரா, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் திருமதி பரிமளா, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் செல்வி.லாவண்யா, மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் திரு.சு.சரவணன் மற்றும் அனைத்து துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், மாவட்ட ஆட்சியரகம், திருவண்ணாமலை.